# சென்னை மெட்ரோ 2-ம்கட்ட பணிகள் விரைவில் தொடக்கம்

கவர்னர் உரையில் கூறி இருப்பதாவது:-

2009-ம் ஆண்டில், முன் னாள் முதல்-அமைச்சர் முத் தமிழறிஞர் கலைஞர் அவர்களின் தலைமையி லான அரசு, சென்னை மெட்ரோ ரெயில் திட்டப் பணிகளை தொடங்கியது.

சென்னை மெட்ரோ ரெயில் திட்டத்தின் இரண் டாம் கட்டப்பணிகள் விரைவாக நிறைவேற்றப்படு வதை இந்த அரசு உறுதி செய்யும்.

இத்திட்டத்தின் முதல் கட்டத்தை போலவே, 50:50 என்ற செலவுப்பகிர்வு அடிப்படையில், ஒன்றிய அரசு தங்களுடைய பங்கு மூலதனத்திற்கு ஒப்புதலை விரைவாக வழங்க வேண் டும் என்று இந்த அரசு வலி யுறுத்தும்.

மதுரை, திருச்சிராப்பள்ளி, சேலம், திருநெல்வேலி ஆகிய மாவட்டங்களில் பெருந்திரள் போக்குவரத்து அமைப்பு களுக் கான சாத்தியக்கூறு ஆய்வுகள் மேற்கொள்ளப்படும்.